(சுருக்கம்)

திருத்திய ஊதிய விகிதங்கள், 2009 – தீயணைப்பு மற்றும் மீட்புப்பணித் துறையில் உள்ள பணியிடங்களுக்கு ஊதிய திருத்தம் அனுமதித்து ஆணையிடப்படுகிறது.

---

**நிதி (ஊதியப்பிரிவு)த் துறை**

அ.ஆ. நிலை எண்:68

நாள்: 26—2—2011.
மாசி, 14.
திருவள்ளுவர் ஆண்டு, 2042.

**படிக்கவும்**:--

1. அரசாணை நிலை எண்.234, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள்: 1–6–2009.
2. அரசாணை நிலை எண்.235, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள்: 1–6–2009.
3. அரசு கடித எண்.41530 / ஊதியப் பிரிவு / 2009–1, நிதித்துறை, நாள்: 28–7–2009.
4. அரசு கடித எண்.63305 / ஊதியப் பிரிவு / 2010–1 மற்றும் 2, நிதித்துறை, நாள்: 8–11–2010.
5. அரசாணை நிலை எண்.276, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள்: 26–8–2010.
6. அரசாணை நிலை எண்.45, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள்: 10–2–2011.

– – – – –

**<u>ஆணை</u>:–**

அலுவலர் குழு, 2009–ன் பரிந்துரைகளின்படி அனைத்து துறைகளில் பணிபுரியும் இளநிலை உதவியாளர் / தட்டச்சர்கள், உதவியாளர் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–III ஆகிய பணியிடங்களுக்கு திருத்திய ஊதிய விகிதங்கள் முறையே ரூ.5200—20200 + தர ஊதியம் ரூ.2000 மற்றும் ரூ.5200 –20200 + தர ஊதியம் ரூ.2400 அனுமதித்து 1–1–2006 முதல் கருத்தியலாகவும் 1–1–2007 முதல் பணப்பயன் பெறும் வகையிலும் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டன. அவ்வாறே முன்னணி தீயணைப்பாளர், தீயணைப்பு நிலைய உதவி அலுவலர், தீயணைப்பு நிலைய அலுவலர், உதவி கோட்ட தீயணைப்பு அலுவலர் ஆகிய பணியிடங்களுக்கும் திருத்திய ஊதிய விகிதங்கள் முறையே ரூ.5200—20200 + தர ஊதியம் ரூ.1900, 5200—20200 + தர ஊதியம் ரூ.2000, ரூ.9300–34800 + தர ஊதியம் ரூ.4200 மற்றும் ரூ.9300—34800 + தர ஊதியம் ரூ.4600 நிர்ணயித்து ஆணையிடப்பட்டது. மேலும் ஒரு நபர் குழுவின் பரிந்துரைகளின்படி முன்னணி தீயணைப்பாளர், தீயணைப்பு நிலைய உதவி அலுவலர், தீயணைப்பு நிலைய அலுவலர் பணியிடத்திற்கான ஊதிய விகிதம் ரூ.5200–20200 + தர ஊதியம் ரூ.1900–லிருந்து ரூ.5200–20200 + தர ஊதியம் ரூ.2000 ஆகவும் ரூ.5200–20200 + தர ஊதியம் ரூ.2000 –லிருந்து ரூ.5200–20200 + தர ஊதியம் ரூ.2400-ஆகவும் ரூ.9300—34800 + தர ஊதியம் ரூ.4200–லிருந்து ரூ.9300—34800 + தர ஊதியம் ரூ.4400–ஆக திருத்தியமைத்து 1–1–2006 முதல் கருத்தியலாகவும் 1–8–2010 முதல் பணப்பயன் பெறும் வகையிலும் மேலே ஐந்தில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. மேலே–6–ல் படிக்கப்பட்ட அரசாணையில் அனைத்து துறைகளில் உள்ள இளநிலை உதவியாளர் / தட்டச்சர் மற்றும் உதவியாளர், சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–III ஆகிய பணியிடங்களுக்கு முறையே ரூ.5200—20200 + தர ஊதியம் ரூ.2000–லிருந்து ரூ.5200—20200 + தர ஊதியம் ரூ.2400–ஆகவும் ரூ.5200—20200 + தர ஊதியம் ரூ.2400–லிருந்து ரூ.5200—20200 + தர ஊதியம் ரூ.2800–ஆகவும் நிர்ணயம் செய்து 1––1––2006 முதல் கருத்தியலாகவும் 1––2––2011 முதல் பணப்பயன் பெறும் வகையிலும் ஆணைகள் வெளியிடப்பட்டன.

3. முன்னணி தீயணைப்பாளர் மற்றும் தீயணைப்பு நிலைய உதவி அலுவலர் ஆகிய பணியிடங்களுக்கு இளநிலை உதவியாளர் மற்றும் உதவியாளர் பணியிடங்களுக்கு அனுமதிக்கப்பட்ட முந்தைய ஊதிய விகிதமான ரூ.3200—4900 / ரூ.4000–6000–க்கு இணையான திருத்திய ஊதிய விகிதம் ஒரு நபர் குழு, 2009 பரிந்துரையின்படி ரூ.5200—20200 + தர ஊதியம் ரூ.2000 மற்றும் ரூ.5200–20200 + தர ஊதியம் ரூ.2400 என நிர்ணயம் செய்யப்பட்டு சமநிலையில் இருந்து வந்துள்ளனர். இந்நிலையினையும் மற்றும் அவர்களின் அபாயகரமான பணியின் தன்மையையும் கருத்தில் கொண்டு மேலே–6–ல் படிக்கப்பட்ட அரசாணையில் இளநிலை உதவியாளர்/உதவியாளர்களுக்கு ரூ.5200—20200 + தர ஊதியம் ரூ.2000–லிருந்து ரூ.5200—20200 + தர ஊதியம் ரூ.2400– ஆகவும் ரூ.5200–20200 + தர ஊதியம் ரூ.2400–லிருந்து ரூ.5200–20200 + தர ஊதியம் ரூ.2800-ஆகவும் ஊதிய திருத்தம் செய்யப்பட்டதை மேற்கூறிய முன்னணி தீயணைப்பாளர் மற்றும் தீயணைப்பு நிலைய உதவி அலுவலர் பணியிடங்களுக்கும் நீட்டிக்கப்படுகிறது. அவ்வாறே தீயணைப்பு நிலைய அலுவலரின் ஊதிய விகிதத்தை ரூ.9300–34800 + தர ஊதியம் ரூ.4400–லிருந்து ரூ.9300–34800 + தர ஊதியம் ரூ.4600–ஆக திருத்தி அமைக்கப்படுகிறது. மேலும் உதவிக் கோட்ட தீயணைப்பு அலுவலர் பணியிடத்திற்கு ஐந்தாவது ஊதியக்குழு மற்றும் அலுவலர் குழு, 98–ன் ஊதிய விகிதங்களில் அமைச்சுப்பணி கண்காணிப்பாளர்களுக்கு இணையான ஊதிய விகிதம் ரூ.1600—2660 / ரூ.5300—8300 அனுமதிக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு உச்சநீதிமன்ற உத்தரவுப்படி தற்போது அமைச்சுப்பணி கண்காணிப்பாளர் பணியிடத்திற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள ஊதிய விகிதமான ரூ.9300—34800 + தர ஊதியம் ரூ.4800/–ஐ நிர்ணயம் செய்ய முடிவெடுத்து அதற்கிணங்க கீழ்கண்ட பணியிடங்களின் ஊதிய முரண்பாடுகளைக் களைந்து ஊதிய திருத்தங்கள் மேற்கொள்ள அரசு ஆணையிடுகிறது:--

| வரிசை எண் | பணியிடங்களின் பெயர் | தற்போதைய ஊதிய விகிதம் (ஊதிய விகிதம் + தர ஊதியம்) | திருத்தியமைக்கப்படும் ஊதிய விகிதம் + தர ஊதியம் |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| 1. | முன்னணி தீயணைப்பாளர் | 5200—20200 + 2000 | 5200—20200 + 2400 |
| 2. | தீயணைப்பு நிலைய உதவி அலுவலர் | 5200—20200 + 2400 | 5200—20200 + 2800 |
| 3. | தீயணைப்பு நிலைய அலுவலர் | 9300—34800 + 4400 | 9300—34800 + 4600 |
| 4. | உதவி கோட்ட தீயணைப்பு அலுவலர் | 9300–-34800 + 4600 | 9300––34800 + 4800 |

4. மேற்கூறிய ஊதிய திருத்தங்கள் 1––1––2006 முதல் கருத்தியலாகவும் 1––3––2011 முதல் பணப்பயன் பெறும் வகையிலும் நடைமுறைப்படுத்தப்படும்.

**/ஆளுநரின் ஆணைப்படி /**

**க. சண்முகம்,**
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அரசு முதன்மைச் செயலாளர், உள்துறை, சென்னை – 2.
இயக்குநர், தீயணைப்பு மற்றும் மீட்புத்துறை, சென்னை – 8.
மாநில கணக்குத் துறைத் தலைவர் ( கணக்குகள் (ம) உரிமைத் தொகை) , சென்னை–18.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (துணிக்கை –I), சென்னை–18.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (துணிக்கை –II), சென்னை–18.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (CAB), சென்னை–9 / மதுரை.
இயக்குநர், கருவூலங்கள் மற்றும் கணக்குத்துறை, சென்னை-15.
ஓய்வூதிய இயக்குநர், டி.எம்.எஸ். வளாகம், சென்னை–6.
உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், சென்னை–108.
ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், சென்னை–6.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை–9.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர், (வடக்கு/ தெற்கு / கிழக்கு ) சென்னை – 1 /35/8.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர், மதுரை – 625 001.
அனைத்து கருவூல அலுவலர்கள் / அனைத்து சார்நிலைக் கருவூல அலுவலர்கள்.

நகல் :
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை—2.
மாண்புமிகு துணைமுதலமைச்சரின் செயலாளர், சென்னை—2.
மாண்புமிகு நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை—2.
அரசு தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை—2.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர், நிதித்துறை, சென்னை—9.
உள்துறை, சென்னை – 2.
நிதி (உள்துறை) சென்னை – 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/**

து. ஸ்ரீதர்
26/2/2011

ஆராய்ச்சி அலுவலர்.